# கடலூர் பெருநகராட்சி

**2021ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31–ம் நாள் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு இந்நகர்மன்ற இயல்புக் கூட்டம் கீழ்க்கண்ட பொருட்களை முடிவு செய்ய நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும்.**

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 31.08.2021

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.

*பொருட்கள்*

| | |
|---|---|
| 1) | கடலூர் பெருநகராட்சியில் இயங்கி வரும் TN 31 AF 7635 பதிவெண் கொண்ட டம்பர் பிளேசர் கனரக (Eicher Lorry) வாகனத்திற்கு ஆயுள் காப்பீடு முடிவடைந்துள்ளது. எனவே, 03.08.2021 முதல் 02.08.2022 வரை ஆயுள் காப்பீட்டை புதுப்பிக்கவும், இதற்கான செலவினத் தொகை ரு.33055/– ஐ நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மேற்படி தொகையை நேஷனல் இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண் 2323/2016/இ3) |
| 2) | கடலூர் பெருநகராட்சி 2019–2020 ஆம் ஆண்டுக்குரிய தணிக்கை கட்டணம் ரு.10,40,363/–ஐ செலுத்த 2019–2020ம் ஆண்டு பொதுநிதி தணிக்கை அறிக்கையில் பத்தி எண் 174ல் ஊதியம் மற்றும் இதர படிகளின் உண்மை செலவினத்தில் 50 சதவீதம் தணிக்கை கட்டணமாக ரு.10,40,363/–ஐ அரசு தலைப்பில் செலுத்த மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
| 3) | கடலூர் பெருநகராட்சி வார்டு எண் 5, கதவு எண் 7 ஆக்கர் வெங்கட்ராமன் தெருவில் உள்ள வீட்டின் வரிவிதிப்பு எண் 093/005/005956 (ப.வ.வி. எண் 5627) தவறாக நிர்ணயம் செய்யபபட்ட வரிவிதிப்பு எண்ணையும் 1990–91 முதல் 2014–15 வரை நிலுவை தொகை ரு.54995/–ஐ கணினியில் இருந்து நீக்கம் செய்யவும், இந்நகர்மன்ற தீர்மான எண் 700 நாள் |

| | |
|---|---|
| | 23.02.2015 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்படி கேட்பினை கணினியில் இருந்து நீக்கம் செய்யப்படாததால், தற்போது வரை கேட்பு கணினியில் எழுப்பப்பட்டு வருகிறது.<br>தற்போது 1990–91 முதல் 2021–22 வரை ரு.76109/– நிலுவையில் உள்ள தொகையினை கணினியில் இருந்து நீக்கம் செய்யவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. |
| அ.கு. | அ) மன்றம் ஏற்கலாம்.<br>ஆ) தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 118ன் கீழ் வசூலிக்க மார்க்கம் இல்லாத சொத்து வரி விதிப்பு எண் 093/005/00596 (பழைய வரிவிதிப்பு எண் 093/5627) நிலுவை கேட்பு தொகை ரு.76109/– கணினியில் இருந்து நீக்கம் செய்யலாம். ( 2865/2014/அ1) |
| 4) | கடலூர் பெருநகராட்சி பகுதி COVID CARE CENTRE தேவனாம்பட்டினம் அரசு கல்லூரியில் செயல்படுகிறது.<br>அ) மேற்படி மையத்தில் சிசிக்சை பெறும் தொற்று கண்டவர்களுக்கு மூன்று வேளை உணவு நகராட்சி செலவில் என்.ஜி.ஓ. மூலம் வழங்கப்படுகிறது.<br>ஆ) நகர்பகுதிகளில் SWAP TEST பணியும் தன்னார்வலர் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.<br>மேற்படி (அ) விற்கு ஜுன் 14, 2021 வரை உணவுக்குரிய தொகை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி (ஆ)விற்கு ஜுன் 10 வரை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், ஏற்கனவே ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி பெறப்பட்டதில், தொடர்பணிக்கு ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| அ.கு. | கொரோனா தொற்று பரவுதலை இன்னமும் தடுக்க முடியாத சூழ்நிலையில், நோய் தடுப்பு பணிகள் தற்போது முழு வீச்சில் நடைபெற்று வருவதால், பணியின் அவசர அவசியம் கருதி ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம். |
| 5) | கடலூர் பெருநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் TN 31 AF 7635 பதிவெண் கொண்ட குடிநீர் லாரிக்கு ஆயுள் காப்பீடு 12.08.2021 உடன் முடிவடைவதால், இவ்வாகனத்தின் ஆயுள் காப்பீட்டை 13.08.2021 முதல் 12.08.2022 வரை புதுப்பிக்க ஆகும் செலவினம் ரு.40,442/–க்கு நிர்வாக அனுமதியும், மேற்படி தொகையினை நேஷனல் இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தவும், இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |
| 6) | கடலூர் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட 45 வார்டு பகுதிகளில் 8570 எண்ணிக்கையிலான அனைத்து தெருவிளக்குகளை பராமரிக்க தேவையான மின் உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் 17.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 19.02.2021 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு ஒப்பந்ததாரரால் மின் உபகரணங்களை விநியோகம் செய்யப்பட்டு தெரு விளக்கு பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்சமயம் மின் உபகரணங்களின் இருப்பு குறைவாக உள்ளதால் தெரு விளக்குகளை பராமரிக்க மின் உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |

| | |
|---|---|
| அ.கு. | 1, மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசியம் அவசரம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 7998/2021/இ2) |
| 7) | கடலூார் பெருநகராட்சியில் பணி செய்யும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் பணியாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரித்தொகை 2020–21ம் ஆண்டிற்கு தொகைகள் அனைத்தும் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. அவற்றினை நகராட்சி சார்பில் திரு.எல்.முத்துக்குமரன், பட்டயக் கணக்கர் முலம் 4 காலாண்டுகளுக்கு E-filing செய்த வகையில் ரு.50000/–ஐ வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு. | அனுமதிக்கலாம். |
| 8) | கடலூார் பெருநகராட்சிக்கு சொந்தமான திருப்பாதிரிப்புலியூர் பேருந்து நிலையம் புதிய வணிக வளாகம் தரைதள கடை எண் 17க்கு வாடகை விட இந்நகர்மன்றம் 31.10.2019ம் தேதிய தீர்மான எண் 2688–ல் அனுமதிக்கப்பட்டுள்ளதன்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |

| அழைப்பு எண் | நாள் | பெயர் மற்றும் முகவரி | ஏலத்தில் கோரிய தொகை ( மாத வாடகை ) ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை (மாத வாடகை) ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 12.07.2021 | திருமதி.திவ்யா, க/பெ.கோபிநாத், 10ஏ–3 மெயின் ரோடு தேவனாம்பட்டினம் கடலூர் 607 001 | ஏலம்கோர எவரும் முன்வரவில்லை | 20,500/– |
| 2 | 28.07.2021 | –– | ஏலம்கோர எவரும் முன்வரவில்லை | ஒப்பந்தப்புள்ளி எதுவும் பெறப்படவில்லை |
| 3 | 12.08.2021 | திருமதி.திவ்யா, க/பெ.கோபிநாத், 10ஏ–3 மெயின் ரோடு தேவனாம்பட்டினம் கடலூர் 607 001 | ஏலம்கோர எவரும் முன்வரவில்லை | 28,500/– |
| 4 | | திரு.ரவிச்சந்திரன், த/பெ.நடராஜன், 37 வேலு நகர், கூத்தப்பாக்கம், கடலூார் | ஏலம்கோர எவரும் முன்வரவில்லை | 21,100/– |
| | | திரு.நடராஜன், த/பெ.கிருஷ்ணமுர்த்தி, ஸ்ரீவேலன் நகர், சூரசம்காரத் தெரு, புதிய வண்டிப்பாளையம், | ஏலம்கோர எவரும் முன்வரவில்லை | 21,100/– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கரையேறவிட்ட குப்பம்,<br>கடலூர் 607 004 | | |
| | | திரு.அருணாச்சலம்,<br>த/பெ.ராஜவேல், 92<br>கிழக்கு தெரு,<br>கீரப்பாளையம்,<br>வெள்ளக்கரை,<br>கடலூர் 607 003 | ஏலம்கோர<br>எவரும்<br>முன்வரவில்லை | 21,112/- |

மேற்படி, ஒப்பந்தப்புள்ளியில் திருமதி,திவ்யா, க/பெ.கோபிநாத் என்பவரால் குறிப்பிட்ட மாத வாடகை தொகை ரூ.28,500/— கடந்த மூன்று ஆண்டின் மாத வாடகையை விட 15 சதவீதம் கூடுதலாகவும், கடந்த ஆண்டின் மாத வாடகை ரூ.17,490/- விட 63 சதவீதம் ரூ.11018/— கூடுதலாக உள்ளது.

எனவே, மேற்படி அதிகப்பட்சமாக கோரிய திருமதி.திவ்யா, க/பெ.கோபிநாத் என்பவர் கோரிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ரூ.28500/— க்கு ஜிஎஸ்டி 18 சதவீதம் மாத வாடகைக்கு ஒப்படைக்கலாம். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு.

1) அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் பொறுப்பு அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் ஏற்கலாம். ( ந.க.எண் 7431/ 2021/ அ2)

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 31/08/2021

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.